## த.வெ.க. அரசின் அலட்சியத்தால்

# மேகமலை மக்களுக்கு பாதகமான தீர்ப்பு!

## தலைமைச் செயலகத்தில் முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ. பேட்டி!

**சென்னை, செப்.10-**

**சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ., "த.வெ.க. அரசின் அலட்சியத்தால் மேகமலை மக்களுக்கு இன்றைக்குப் பாதகமான தீர்ப்பு வரப்பெற்றுள்ளது" என்று குற்றஞ்சாட்டினார்.**

இப்பேட்டியின் போது முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி கூறியதாவது:-

"தேனி மாவட்டம் மேகமலைப் பகுதி, அது இன்றைக்கு ஒரு முக்கியப் பிரச்சினையாக உள்ள ஒரு சப்ஜெக்ட். அது முதன்முதலாக சிங்கம்பட்டி ஜமீனுக்குச் சொந்தமாக இருந்தது. சிங்கம்பட்டி ஜமீன் அதை பாம்பே பர்மா டிரேடிங் கார்ப்பரேஷனுக்காக மரம் வெட்டுதல், மற்ற தொழில்கள் செய்வதற்காக99 ஆண்டு குத்தகைக்கு விட்டார்கள். அங்கே சிங்கம்பட்டி ஜமீனால் அது குத்தகைக்கு விடப்பட்டது.

அன்றிலிருந்து அதிலே பலர் வேலை பார்த்தார்கள், ரிட்டயர்ட் ஆகியிருக்கிறார்கள். இன்றைக்கு 118 குடும்பங்கள் அங்கே வசித்துக்கொண்டிருக்கின்றன. அரசு ஊழியர்கள் எல்லாம் இருக்கிறார்கள். 4,300 பேர் மற்ற போக்குவரத்தோடு இருக்கும் ஒரு பகுதி. அதற்குச் சாலை வசதி, மற்ற வசதிகள் அனைத்துமே செய்து தரப்பட்டது. ஆனால் இடையிலே ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம் எல்லாம் வந்ததனால், பல்வேறு சட்டச் சிக்கல்கள் அங்கே ஏற்பட்டன. அது சிங்கம்பட்டி ஜமீனுக்கும் அரசுக்கும் உண்டான பிரச்சினை.

ஆனால், அதை புலிகள் சரணாலயம், வனப் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் கொண்டு வருகிற பொழுது, அங்கே இருக்கக்கூடிய மக்களை வெளியேற்ற வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது.

எங்களுக்குக் கிடைத்த தகவல் படி,1924இல் இருந்து அவர்கள் இருப்பதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. எனவே, உயர்நீதிமன்றத்திலே எங்களுடைய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்தக்கருத்துக்களை எல்லாம் எடுத்துக்கூறி வாதிட்டு, கடந்த 2024ஆம் ஆண்டு ஒரு சிறந்த தீர்ப்பைப் பெற்றோம்.



'ஒரு ஸ்கீம் தயார் செய்ய வேண்டும். அந்த ஸ்கீம்படி அங்கே இருக்கும் மக்களுக்கு மாற்று இடங்கள் கொடுத்து, அவர்களுக்கு மாற்று வேலை ஏற்பாடுகள் செய்து, அவர்களைப் படிப்படியாக வெளியேற்ற வேண்டும்' என்ற உத்தரவை நாங்கள் உயர்நீதிமன்றத்திலே பெற்றோம்.

**த.வெ.க. அரசின் கையாலாகாத்தனம்!**

ஆனால் கென்னடி என்பவர், உச்ச நீதிமன்றத்திலே சென்று இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்கிறார். அந்த மேல்முறையீட்டு வழக்கு 27.05.2026 அன்று விசாரணைக்கு வருகிறது. அப்பொழுது யாருடைய ஆட்சி? த.வெ.க. ஆட்சி.

ஆனால் அன்றைய தினம் ஒரு 'சென்சிட்டிவ்'ஆன இந்த வழக்கிலே, ஒரு கால அவகாசம் கூடக் கேட்காமல், வீடியோ கான்ஃபரன்ஸ் மூலமாக 'எடுத்தோம் கவிழ்த்தோம்' என்ற முறையிலே அங்கே ஒழுங்கான சட்டப் பிரச்சினைகளை எடுத்து வைத்து த.வெ.க. அரசு வாதாடாத காரணத்தால் தான், இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே, அந்த மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டு, 'துணை ராணுவத்தைக் கொண்டாவது அவர்களை வெளியேற்ற வேண்டும்' என்று தீர்ப்பு வந்திருக்கிறது என்று சொன்னால், அதற்கு அடிப்படைகாரணம் தமிழக வெற்றிக் கழக அரசின் சட்டத்துறையின் கையாலாகாத்தனம் என்று சொன்னால், அது தவறே கிடையாது. ஏனென்றால் அவர்கள் வாய்தா வாங்கியிருக்க வேண்டும். 27ஆம் தேதி ஒழுங்காகச் செய்யவில்லை, 29ஆம் தேதி தீர்ப்பு வருகிறது.

**தி.மு.க. மீது பழிபோட மட்டுமே தெரிந்த த.வெ.க. அரசு!**

ஆனால், எதற்கு எடுத்தாலும் தி.மு.க. மீது பழிபோடுவது ஒன்றுதான் இன்றைக்குத் த.வெ.க.வின் கொள்கை. அதே கொள்கையை இதிலே சொல்கிறார்கள். நீங்கள் 2024 தீர்ப்பைப் பாருங்கள், அதைப்போல 2026 தீர்ப்பையும் பாருங்கள். எனவே 2024இல் அங்கே இருக்கும் மக்களைப் பாதுகாப்பதற்காக நாங்கள் என்னென்ன முறையிலே வாதாடியிருக்கிறோம் என்பது தீர்ப்பிலேயே தெரியும்.

எனவேதான், உச்சநீதிமன்றம் அங்கே ஒரு நீதிமன்றஉதவியாளரை நியமித்தது, ஏனென்றால் எங்கே தமிழ்நாடு அரசு ஒருபக்கமாகச் சார்ந்துவிடுமோ என்று கூட அவர்கள் நினைத்தார்கள். ஆனால் நாங்கள் நீதிக்குத் தலைவணங்குபவர்கள். அதேநேரத்தில் மக்களுக்குத் துணையாக இருப்பவர்கள். நாங்கள் சட்டத்தையும் பாதுகாக்க வேண்டும், மக்களையும் பாதுகாக்க வேண்டும். இரண்டும் ஓர் அரசின் கடமை. அந்தக்கடமையை திராவிட முன்னேற்றக் கழகம் ஒழுங்காகச் செய்தது.

ஆனால், தமிழக வெற்றிக் கழகம் 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்றசினிமா பாணியிலே போய், அதை நடத்தினார்கள். அந்தக்காரணத்தால்தான் இன்றைக்கு இந்த மேகமலைப் பிரச்சினையே ஏற்பட்டிருக்கிறது. ஒழுங்காக வாதங்களை எடுத்து வைத்திருப்பார்களேயானால் நிச்சயமாக உச்சநீதிமன்றத்தை நம்மால் கன்வின்ஸ் செய்திருக்க முடியும்.

நாம் வேறு ஒன்றும் சொல்லவில்லை, மாற்றிடம் கொடுத்துப் செய்கிறோம்என்ற ஸ்கீம் கேட்டிருந்தோம். அந்த ஸ்கீமை நம்மாலே உறுதிப்படுத்தி இருக்க முடியும். அதையெல்லாம் செய்யாமல் விட்டுவிட்டது, த.வெ.க. அரசின் கையாலாகாத்தனம். எனவே இன்றைக்கு மேகமலைப் பிரச்சினைக்கு முழுக்க முழுக்கப் பொறுப்பு விஜய் அரசின் கையாலாகாத்தனம்தான்."

இவ்வாறு எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ. குறிப்பிட்டார்.

---

## மேகமலை மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க தி.மு.க. அரசு போல்

# த.வெ.க. அரசும் தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## தலைமைச் செயலகத்தில் – முன்னாள் அமைச்சர் ராஜ கண்ணப்பன் எம்.எல்.ஏ. பேட்டி!

**சென்னை, செப்.10-**

**மேகமலை மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க தி.மு.க. அரசு போல், தற்போதைய அரசும் தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த முன்னாள் அமைச்சர் எஸ்.ராஜ கண்ணப்பன் எம்.எல்.ஏ. குறிப்பிட்டார்.**

அவர் செய்தியாளர் பேட்டியின் போது குறிப்பிட்டதாவது:-

நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் ஆகியோர்தான் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். 'ஒழுங்காக மறுஆய்வு மனு தாக்கல் செய்கிறோம்' என்று கூறுகிறார்கள்.

உச்சநீதிமன்றத்தில் மறுஆய்வு மனுத் தாக்கல் செய்து என்ன ஆகப்போகிறது? அவர்கள் சொல்வதைத் தான் மீண்டும் சொல்வார்கள். எனவே, மறுஆய்வு மனுத் தாக்கல் செய்வது முக்கியமில்லை. யார் மூல வழக்கினை ஒழுங்காக நடத்த வேண்டும் என்பது தான் முக்கியம்.

29.05.2026 அன்று தீர்ப்பு கொடுக்கிறார்கள் என்றால், யாருடைய அரசு? த.வெ.க. அரசு. அரசின் சட்டத்துறை அமைச்சர் நிர்மல் குமார் சொல்கிறார், 'நாங்கள் மறுஆய்வு மனுத் தாக்கல் செய்வோம்' என்று. மறுஆய்வு மனுத் தாக்கல் செய்து என்ன செய்வது?



"இரண்டாவது, நாங்கள் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருந்தோம். உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு வந்ததையடுத்து, சுப்ரீம் கோர்ட்டுக்கு கென்னடி சென்றார். அவ்வாறு சென்றவுடனேயே என்ன சொல்லியிருந்தோம் என்றால், 'மாற்று இடம் கொடுக்க வேண்டும், அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும்'என்று. 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள். 5ஆயிரத்திற்குமேற்பட்ட ஏக்கரில் பருத்தி போட்டிருந்தார்கள்.

**1924-இல் இருந்து 102 வருஷமாக இருக்கிறார்கள்!**

வனத்துறை சட்டம் 1980 இல் வந்தது. 1960இல் யார் ஆட்சி? காமராஜர் ஆட்சி. காமராஜர்தான் முதலில் இவர்களையெல்லாம் அங்கே குடியேற்றினார். ஒரு 102 வருஷமாக இருக்கிறவர்களை திடீரென்று வெளியேற்ற முடியாது அல்லவா...

எனவே, நாம் ஓர் மாற்று ஏற்பாடு செய்து கொடுத்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்து, அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கு ஓர் அடிப்படை செய்து தந்தது நம்முடைய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில்தான். அப்படிப்பட்ட ஒன்றுதான் அரசாங்கத்திற்கு தேவை. இப்போது வழக்கே நடத்தாமல் 29.05.2026 அன்று தீர்ப்பு வந்துவிட்டது.

**தமிழ்நாடு அரசு சரியாக செய்யவில்லை!**

உச்சநீதிமன்றம் சொல்கிற தீர்ப்பு என்னவென்றால், 'தமிழ்நாடு அரசு சரியாகச் செய்யவில்லை, அதனால் நாங்கள் வெளியேற்றுகிறோம். ஒன்றிய அரசின் காவல்துறையை வைத்தாவது வெளியேற்ற வேண்டும்' என்று சொல்கிறார்கள். அது என்ன நியாயம்?

"உச்சநீதிமன்றம் சொல்வதை சொல்லிவிட்டது. நாம் என்ன செய்ய வேண்டும்? வாழ்வாதாரத்தை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். அவர்கள் 102 வருடங்களாகக் குடியிருக்கிறார்கள். அவர்களுக்குப் பட்டா கொடுக்க முடியாது. என்னவென்றால், பட்டா கொடுக்கக் கூடாது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, எங்களுக்குப் பட்டா கொடுக்கிற அதிகாரமும் கிடையாது.

எனவே, நம்முடைய முறை என்னவென்றால், அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். இரண்டாவது, அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு பிறகு தான் அவர்கள் காலி செய்வார்கள்.

ஓய்வு பெற்றவர்கள் 9 பேர் இருக்கிறார்கள்; அரசு ஊழியர்கள் 111 பேர் இருக்கிறார்கள். 12 ரிசார்ட் இருந்தது. அதில் 6 ரிசார்ட்டை நம்முடைய ஆர்.டி.ஓ. காலி செய்துவிட்டார்.

மேகமலை என்பது நான்கு மாவட்டங்களுக்குச் சொந்தமானது. மேகமலை தேனி ஆண்டிப்பட்டியில் இருந்தாலும், விருதுநகர், ராமநாதபுரம், மதுரை மாவட்டங்களுக்கும் சொந்தமானது.

எங்களுடைய கோரிக்கை என்னவென்றால், அங்கே இருக்கிறவர்களுக்கு வாழ்வாதாரத்தை அடிப்படையாகக் கொடுக்க வேண்டும். முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ன சொன்னாரோ, அதன்படி அவர்களுக்கு வாழ்வாதாரத்திற்கான ஏற்பாடுகளைப் செய்து கொடுக்க வேண்டும். தற்போது குடியிருக்கும் வசதிக்கு வேறு இடத்தை மாற்று இடமாகக் கொடுக்கலாம். அதை அரசாங்கம் செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் செய்தியாளர் பேட்டியில் குறிப்பிட்டார்.

---

## முத்துராஜா எம்.எல்.ஏ. - ஜோயல் பங்கேற்பு!

# நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.அறிக்கை!

*நெல்லை.செப்.10-*

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று (10.09.2026-வியாழக்கிழமை) மதியம் ,3.00 மணியளவில், வண்ணாரப்பேட்டை வடக்கு பைபாஸ் சாலை ஹோட்டல் அஃப்னா பார்க் கூட்ட அரங்கில்

நெல்லை மத்திய மாவட்ட அவைத் தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெறுகிறது.இந் நிகழ்வில் தலைமை கழக பிரதிநிதிகள் முத்துராஜா



எம்.எல்.ஏ. மாநில இளைஞர் அணி துணை செயலாளர் ஜோயல் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர் என நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்

சிறப்புமிக்க இக்கூட்டத்தில் நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,மாநகர கழக நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள்,ஒன்றிய, பேரூர்,வட்ட, கிளை,கழக செயலாளர்கள், பிரதிநிதிகள்,சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாது கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

22.08.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில், கழக தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி கழக மறு சீரமைப்பு குறித்து 2.வது கட்ட ஆலோசனை.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



வடகிழக்குப் பருவமழை துவங்குவதற்கு முன்பாக பாலம் கட்டுமான பணியினை துரிதப்படுத்திய விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ. வி. மார்க்கண்டேயன் தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி உட்பட்ட ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், ஆதனூர் மிளகுநத்தம் செல்லும் சாலையில் கல்லாற்றின் குறுக்கே கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.9.23கோடி மதிப்பீட்டில் பாலம் அமைக்கும் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ. வி. மார்க்கண்டேயன் பார்வையிட்டு வடகிழக்கு பருவமழை துவங்குவதற்கு முன்பாக பணியை துரிதப் படுத்துவதற்கு துறை சார்ந்த அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார். நிகழ்வில் இளநிலை பொறியாளர் நெடுஞ்சாலை சார்லஸ் பிரேம்குமார் ஒட்டப் பிடாரம் வருவாய் ஆய்வாளர் பொன் முருகேசன் ஒன்றிய செயலாளர்கள் காசிவிஸ்வநாதன், ராதாகிருஷ்ணன், இம்மானுவேல் வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராதாகிருஷ்ணன், ஒப்பந்ததாரர் சுப்பா ரெட்டியார் சமூக ஆர்வலர் பேரிலோவன்பட்டி செல்வகுமார், வடக்கு மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் முத்து ராஜ், ஒன்றிய பொருளாளர் அரிபாலகிருஷ்ணன், உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

---

## தோவாளை கிழக்கு ஒன்றியம்

# மாதவலாயம் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்!



*கன்னியாகுமரி, செப்.10-*

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தோவாளை கிழக்கு ஒன்றியம், மாதவலாயம் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது தோவாளை கிழக்கு ஒன்றிய செயலாளர் த.செல்வன் தலைமையில் 07.09.2026, திங்கட்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் கண்ணன்புதூர் பூங்கா அருகில் வைத்து நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் - வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என். தில்லைசெல்வம், மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், துணைச் செயலாளர் ஏ.ஆர். பூதலிங்கம்பிள்ளை, பொதுக்குழு உறுப்பினர் செ.காதர்ரஹ்மான், மாவட்ட பிரதிநிதிகள் C. காந்தி, இம்மானுவேல், S. கல்யாணசுந்தரம், ஒன்றிய அவைத்தலைவர் சொ. சீனிவாசன், பொருளாளர் R.ராஜபாபு, துணைச் செயலாளர் ராஜா ரமணன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் இ.என்.சங்கர், கழக நிர்வாகிகள் வ.இளங்கோ, பீ.பாரூக், வள்ளுவன், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் K.S.பழனி, எஸ். ராஜேஷ், சரத், ஷேக், K.தங்கம் உட்பட ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப் பட்டது.

கழக பணியினை தொய்வின்றி நடத்த கழக தலைவர் கட்டளையை ஏற்று நடக்கவும், மாவட்ட கழகம் அறிவிக்கும் பணிகளை செவ்வனே நிறைவேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காளப் பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் தோவாளை கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.